செ.வெ.எண்.61 நாள்.31.01.2018.

**திருநெல்வேலியில் ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் நடைபெற்ற மனிதநேய வார நிறைவு விழாவில், மனிதநேயம் குறித்து நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

--------

திருநெல்வேலி, வண்ணார்பேட்டை எப்எக்ஸ் பொறியியல் கல்லூரியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் மனித நேய வார நிறைவு விழா இன்று (31.01.2018) நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, மனித நேய வார விழாவினையொட்டி 21.01.2018 முதல் 30.01.2018 வரை ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது–

**தீண்டாமையை ஒழிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மனித நேய வார விழா நடத்தப்படுகிறது. மாணவ, மாணவிகளாகிய நீங்கள் சாதி, மதம், மொழி, இனம் பாகுபாடின்றி ஒற்றுமையுடன் தற்போது மாணவ பருவத்தில் உள்ளதை போல எப்போதும் இருக்க வேண்டும். நீங்கள் முடிவெடுத்தால் தான் பாகுபாட்டினை முற்றிலும் ஒழிக்க முடியும். இளைய சமுதாயத்தினர் நன்றாக படித்து நல்ல வேலைகளுக்கு செல்ல வேண்டும். தனி திறமைகளை வளர்த்து கொள்ள வேண்டும். இன்றைய மனித நேய வார விழாவில் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற 134 மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளும், 10 ம் மற்றும் 12 வகுப்பில் பொது தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளும் வழங்கப்படுகிறது. நீங்கள் நன்றாக படித்து உயர் பதவிகளுக்கு வர வேண்டும். என வாழ்த்தி விடைபெறுகிறேன் என பேசினார்.**

முன்னதாக, விழாவில் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளின் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகளில் கவிதை, கட்டுரை, பேச்சு மற்றும் ஓவிய போட்டிகள் நடத்தப்பட்டு, முதல் இடத்தினை பெற்ற 54 மாணவ, மாணவிகளுக்கும், இரண்டாம் இடத்தினை பெற்ற 42 மாணவ, மாணவிகளுக்கும், மூன்றாம் இடத்தினை பெற்ற 38 மாணவ, மாணவிகளுக்கும் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார். மேலும், ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளிகளில் பயின்று 10ம் மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். **மேலும் தமிழக அரசின் நல்லாசிரியர் விருது பெற்ற கடம்பன்குளம் அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் முனைவர் மு.சுந்தரம் அவர்களை பொன்னாடை அணிவித்து பாராட்டினார்.**

முன்னதாக இன்று (31.01.2018) காலை திருநெல்வேலி டவுண் நெல்லையப்பர் கோவில் அருகில் மனிதநேய வார விழா விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணியில் மாநகராட்சி கல்லணை பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவிகள் 300 மேற்பட்டோர் பங்கேற்றனர்.

இவ்விழாவில், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி.நிர்மலா, கூடுதல் காவல் ஆணையர் திரு.ப.உதயகுமார், துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி.லெட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியர்கள் (திருநெல்வேலி) திருமதி.வெலன்சியா சில்வேரா, (தென்காசி) திரு.கிறிஸ்டோபர் ஜெயராஜ், (சங்கரன்கோவில்) திரு.திருநாவுக்கரசு, (நாங்குநேரி) திருமதி.பத்மபிரியா, பாளையங்கோட்டை வட்டாட்சியர் திரு.தங்கராஜ் மற்றும் அரசு ஆதிதிராவிட நல பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.